LIBRARY
28 JAN 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 1st September 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Block Development Advisory Committee

* 31 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நலத் திட்ட ஆலோசனைக்குழுவிற்குக் கட்சி சார்பற்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா ?

(ஆ) போளூர், கலசபாக்கம் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் நியமனம் பற்றி 1959-ம் ௵ எப்ரல் ௴ 16-ம் தேதி திரு. ச. மொ. அண்ணாமலை, எம்.எல்.ஏ.-யிடமிருந்து கடிதம் வந்ததா ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRABANIAM : (*a*) The non-official Members for the Block Development Committees are not selected on party basis.

(*b*) Yes, Sir.

(*c*) The question of reconstituting the existing Block Development Committees is under consideration. No action is necessary at this stage on the representation of the hon. Member.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத்தில்தான் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய ஒத்துழைப்பு கோரப்படுகிறதே தவிர, அங்கேயுள்ள அதிகாரிகள் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களை அந்தக் கமிட்டிகளில் உறுப்பினர்களாகப் போட வேண்டுமென்று நினைப்பதே யில்லை. காரணம், அவர்கள் பயப்படுகிறார்கள். இதை கவனித்து சர்க்கார் அவசியமான உத்தரவைப் பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் தனிப்பட்டவர்கள் யாரையாவது பார்த்து பயப்படுகிறார்களோ என்னமோ, எனக்குத் தெரியாது. கட்சிகளைப் பார்த்து அவர்கள் யாரும் பயப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. இந்தக் கமிட்டிகளுக்கு உறுப்பினர்களாக நியமிக்கப் படவேண்டியவர்கள்.

The president of the panchayat board.

One who has taken some interest in the co-operative movement in the Block area.

One who has taken some interest in the development of agriculture in that area.

One who is a Harijan and who has taken some interest in the welfare of Harijans in regard to housing schemes.

[1st September 1959

இப்போதுள்ள உத்திரவுப் பிரகாரம், இந்த மாதிரி நான்கு பேர்களை உறுப்பினர்களாகப் போடவேண்டும். இதை எப்படி மாற்றியமைப்பது என்று இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Are the Government aware of the fact that members who are not residing in the Block area have been selected and appointed to these committees? If specific instances of such selected members are brought to the notice of the Government, will the Government consider the question of removing them from the committee?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have any such information with me.

SRI S. M. ANNAMALAI: இப்போது அங்கே நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் ஸ்டேட் கமிட்டியில் 10 பேர் நியமிக்கபட வேண்டும் என்று ஏதாகிலும் தீர்மானித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ப்ளாக் டெவலப்மெண்ட் கமிட்டியின் அமைப்பை எப்படி மாற்றியமைப்பது என்பதே இப்போது பரிசீலனையில் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் வந்து விட்டால் இந்தக் கமிட்டிக்கே அவசியம் இருக்காது. இந்தக் காரணங்களால், இதைப் பற்றி இப்போது அதிகமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

SRI A. GOVINDASAMY: கனம் எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு, அது சம்பந்தமாகத் தகவல் இல்லை என்று கனம் அமைச்சர் பதில் கூறினார். ப்ளாக்கிற்கு அப்பாற்பட்டவர்கள் ப்ளாக் டெவலப்மெண்ட் அட்வைஸரி கமிட்டியில் சேர்க்கப்பட்டிருப்பது பற்றி கனம் அமைச்சருக்குத் தகவல் கிடைத்தால், அவர்களை நீக்கிவிட்டு ப்ளாக்கில் உள்ளவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க கனம் அமைச்சர் முன் வருவாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: தகவல் கொடுத்தால் பார்க்கலாம். சில சமயங்களில், நியமிக்கப்பட்டிருக்கும் எம்.எல்.ஏ. சம்பந்தப்பட்ட ப்ளாக்கில் இல்லாதவராக இருக்கலாம், அவர் இன்னொரு பிராந்தியத்தில் இருப்பவராக இருக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN: சமுதாய நலத்திட்டம் நிறைவேறுவதற்கு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரும் கனம் அமைச்சர்கள், இந்தக் கமிட்டிகளில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ-க்கள், எம்.எல்.சி-க்கள், கட்சி சார்பற்ற எம்.எல்.ஏ-க்கள், எம்.எல்.சி-க்கள் இவர்கள் தவிர காங்கிரஸாரல்லாத வேறு யாராவது இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்று என்னிடம் தகவல் இருக்கிறது. ஒவ்வொரு ப்ளாக்கிலும், அட்வைசரி கமிட்டியில் காங்கிரசுடன் தொடர்பில்லாதவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

SRI T. L. SASIVARNA THEVAR: புதுவத்தூர் தொகுதியில் 4 ப்ளாக்குகளில் அட்வைசரி கமிட்டிகளில் உள்ள உறுப்பினர்களில் எம்.எல்.ஏ-க்கள் தவிர மற்றவர்கள் எல்லோரும் காங்கிரஸ்காரர்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனிப்பட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் இப்போது பதில் சொல்ல முடியாது.

1st September 1959]

SRI K. VINAYAKAM : கம்யூனிடி ப்ராஜெக்ட் அட்வைசரி கமிட்டியில் அங்கம் வகிக்கும் விஷயத்தில், அந்தத் திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அங்கம் வகிப்பது தானே நல்லது? அந்தத் திட்டம் சரியல்ல என்று தினந்தோறும் பிரசாரம் செய்பவர்கள், சட்ட சபை அங்கத்தினர்களாக இருப்பதால் அங்கே அங்கம் வகிக்க வேண்டுமென்று சொல்வது சரியா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பிரசாரத்தை கமிடியிலும் செய்யலாம் என்ற நோக்கத்துடன் அங்கே வரவேண்டுமென்று அவர்கள் கோருகிறார்களோ என்னமோ, எனக்குத் தெரியாது.

Desilting of Kalasamudram in Polur taluk

* 32 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

வட ஆற்காடு ஜில்லா, போளூர் வட்டம், காளசமுத்திரம் ஏரியிலுள்ள மண்ணை வாரும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The scheme has been dropped as it was found to be highly uneconomical.

SRI S. M. ANNAMALAI : இந்த காளசமுத்திரம் ஏரியில் ஏறத்தாழ இரண்டு மாதங்கள் தண்ணீர் வந்திருந்த போதிலும்கூட ஒரு நாளைக்கு கூட பாய்வதில்லை. இரண்டு ஆண்டுகளாக அங்கே தொடர்ந்து ' ரெமிஷன் ' கொடுத்து வருகிறார்கள். ஏரியில் 12 அடிக்கு மேல் மண் அடித்து தூர்ந்து போய் இருக்கிறது. மதகு பூராவும் தூர்ந்துபோய் இருக்கிறது. அதனால் அங்கே தண்ணீர் பாய்வதில்லை. எனவே அதை மறு பரிசீலனை செய்து மண்ணை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மழையில்லாததால் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை என்றால், அப்போது ஏரி எவ்வளவு நல்ல நிலையிலிருந்தாலும் அதைத் தவிர்க்க முடியாது. இந்த ஏரியைப் பொறுத்த வரையில் இதன் மூலம் சாகுபடி செய்யப்படக்கூடிய நிலப் பரப்பு 154 ஏக்கர் 77 சென்ட். சென்ற ஐந்து வருஷங்களில் இதன் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நிலப் பரப்பு 145 ஏக்கர் 76 செண்ட். ஆகையால் சாகுபடி செய்யாமல் போனது 9 ஏக்கர் 1 செண்ட்தான். மேலும் இந்த ஏரியின் ' காச்மெண்ட் ஏரியா ' மலைப் பிராந்தியத்தில் இருக்கிறது. ஆகையால் வேகமாக மண்ணை அடித்துக் கொண்டு போகிறது. மதகை சரிபடுத்த வேண்டுமானால் அதற்கு 30,000 ரூபாய் செலவாகும். அவ்வளவு செலவு செய்தாலும ஏற்படக்கூடிய பலன் கணிசமாக இருக்காது என்று தெரிகிறது. ஆகையால் இதற்கு 30,000 ரூபாய் செலவு செய்வது ' அன்இகனாமிகல் ' என்பதால் இது கைவிடப்பட்டிருக்கிறது.

" Swayamariyathai " marriages

* 33 *Q.*—SRI M. P. SUBRAMANIAM :
SRI S. LAZAR : } Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to bring in legislation to validate " Swayamariyathai " or non-religious marriages so far conducted in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. LAZAR : ஒரு சாரார் இது போன்ற கல்யாணங்களைச் செய்து வைப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் தகராறுகள் வரும் போது கோர்ட்டுகளில் இவர்களுக்கு பாதகமான தீர்ப்புகள் (இக்கல்யாணங்கள் செல்லுபடியாகா என்ற தீர்ப்புகள்), வழங்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதுபோன்ற கல்யாணங்களை செய்துவைக்கக் கூடாது என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்யுமா ?